(ஒ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2011), மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2011)[@] *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."*

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள். சுருக்கமாகக் கூறுங்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவினுடைய பின் இணைப்பிலே இருக்கிற வரிசை எண் 9-இல் பீடி மற்றும் புகையிலைக்கு 12.5 விழுக்காடு வீதத்தில் விதிக்கப்பட்ட மதிப்புக் கூட்டு வரி 14.5 விழுக்காடாக உயர்த்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அண்டை மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது இப்போதே ஒரு பீடிக்கு 7 நயா பைசா வித்தியாசம் இருக்கிறது; ஆகவே, இதைக் குறைத்தால்தான் போட்டியிட முடியும்; இல்லாவிட்டால் இந்தத் தொழில் பாதிக்கும்; இலட்சக்கணக்கான பேர் பாதிக்கப்படுவார்கள் என்று அந்தத் தொழிலில் உள்ளவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, அதற்கு விதிவிலக்களிக்க வேண்டும். ஏற்கெனவே இருக்கிற அளவுக்கே வரியை விதிக்க வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

[@] *14–9–2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.*

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் வரிவிகிதம் 4 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாக உயர்த்துவதற்கும் மற்றும் 12.5 சதவிகிதத்திலிருந்து 14.5 சதவிகிதமாக உயர்த்துவதற்கும் மத்திய அரசு ஏற்கெனவே ஆணை வழங்கி இருக்கிறது. புகையிலையைப் பொறுத்தவரைக்கும், தமிழகத்தைவிட மற்ற மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா, கேரளா, மகாராஷ்டிரா, குஜராத் போன்ற மாநிலங்களில் அதிகமான வரி விதிக்கப்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் நம்முடைய மாநிலத்தில் குறைவான அளவிற்கே வரியினை விதித்திருக்கிறார்கள் என்பதை இம்மாமன்றத்திற்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள். அவ்வளவுதான். ஒரு தடவைதான் சொல்ல முடியும். (குறுக்கீடு) மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, இம்மாமன்றத்திலே பேசுகின்றபொழுது வரி ஏய்ப்பு செய்வதைத் தடுக்கின்ற வகையில் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நன்மைக்காக தனிப்பட்ட நபர்களுடைய கஜானாவிற்கு சென்று கொண்டிருக்கின்ற வரி ஏய்ப்பினைத் தடுத்து தமிழக அரசினுடைய கஜானாவிற்கு அந்த வருமானம் வர வேண்டுமென்பதற்காக, நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதுவும் அண்டை மாநிலங்களோடு ஒப்பிடுகையில், தமிழ்நாட்டில் குறைவான அளவிற்கே வரி விதிப்பு செய்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.